**சகல சேவை பெறுநர்கள் மற்றும் ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கான தயவான அறிவித்தல்.**

இது வரையில் தாங்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்கு மேலதிகமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இணையத்தளம் நவீனமயப்படுத்தப்பட்டுதற்போது தங்களுக்கு பின்வரும் புதிய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

1. தங்களது கோரிக்கை கடிதம் / மேன்முறையீடு / விண்ணப்பம் ஆகியவற்றில் தங்களது தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தனிப்பட்ட கையடக்க தொலைப்பேசி இலக்கத்தை குறிப்பிட்டு எமக்கு அனுப்புவதன் மூலம்அது எமக்கு கிடைத்தவுடன் தங்களது கோரிக்கைக்குரிய "தொடர்பு இலக்கம்" குறுஞ்செய்தியூடாக தங்களது கையடக்க தொலைபேசிக்கு அனுப்பப்படும். அந்த "தொடர்பு இலக்கத்தைப்" பயன்படுத்தி தங்களுக்கு பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

   (அ) PSC<இடைவெளி>தொடர்பு இலக்கத்தை 0704364462 இலக்கத்திற்கு SMS மூலம் தாங்கள் அனுப்புவதன் மூலம்தங்களது கோரிக்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள தற்போதைய நிலமையை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாங்களுக்கு SMS மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
   (ஆ) நவீனமயப்படுத்தப்பட்ட இணையத்தளத்தில் பிரவேசித்து "நிலவரம் அறிதல்" (Status Tracking) பீடத்திற்கு தங்களது தொடர்பு இலக்கத்தை உள்ளடக்குவதன் மூலம் தங்களது கோரிக்கை தொடர்பில் ஆரம்பத்திலிருந்து இது வரையில் எடுக்கப்பட்டுள்ள அனைத்து நடவடிக்கைகள் தொடர்பிலும் தங்களுக்கு அது தொடர்பான தகவல்களை ஒரே தடவையில் பார்வையிட முடியும்.

   தங்களது கோரிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் போது ஏதேனும் தாமதம் ஏற்படும் போது அது எந்த நிறுவனத்தினால் ஏற்படுகின்றது என்பதை இதன் மூலம் தங்களுக்கு அறிந்துகொள்ள முடியும். அதற்கிணங்க அது தொடர்பில் வினவி தங்களது பணியை துரிதப்படுத்திக்கொள்ள தங்களுக்கு சந்தர்ப்பம் உள்ளது. அது எங்களுக்குச் செய்யும் உதவியாகும். அவ்வாறே தாங்கள் இந்த அலுவலகத்துடன் தொடர்புகொள்ள உத்தேசிக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் 0112-136603 இலக்கத்தினூடாக மேலதிக செயலாளரை (செயற்படுத்தல்) மாத்திரம் அழைத்து எமக்கு ஒத்துழைக்கவும். ஏனைய உத்தியோகத்தர்களை அழைப்பதன் மூலம் அவர்களது கடமைகளுக்கு அது தடையாக அமையலாம். அவ்வாறே தங்களது தொடர்பு இலக்கம் தொலைந்துவிடாது அதனை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும்.

   இந்த சேவையை தனியாள் ஒருவருக்கு மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதை கவனத்திற்கொள்ளவும். ஒருவருக்கு மேற்பட்டவர்களின் பொதுக் கோரிக்கைகள் தொடர்பில் ஏற்புடைய நிறுவனத் தலைவருக்கு அல்லது திணைக்களத் தலைவருக்கு அல்லது அமைச்சு செயலாளருக்கு தனது கையடக்க தொலைபேசி இலக்கத்தை எமக்கு வழங்குவதன் மூலம் அல்லது தொடர்பு இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இந்த சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2. இந்த ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்கள் ஏற்புடைய அமைச்சு செயலாளர்களுக்கு அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட பின்னர் 2 வேலை நாட்களுக்குள் இணையத்தளத்தில் அது பிரசுரிக்கப்படும். அதற்கிணங்க, எமது இணையத்தளத்திற்குப் பிரவேசித்து "புதிய தீர்மானங்கள்" என்பதை

பார்வையிடுவதன் மூலம் தங்களது விடயத்திற்குரிய தீர்மானம் அமைச்சு செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

3. இந்த இணையத்தளத்தின் மூலம் தற்போது தாங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியுமான தகவல்கள், மாதிரிப் படிவங்கள், சுற்றறிக்கைகள் போன்றவற்றுக்கு மேலதிகமாக சீரமைக்கப்பட்ட விதிக் கோவை, சேவைப் பெறுநர் பட்டயம், அனைத்து சேவைப் பிரமாணங்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், இடமாற்றத் திட்டங்கள் போன்றவை மற்றும் அவ்வாறே தாங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட நிறுவனங்களிலிருந்து வேண்டப்பட்டுள்ள அறிக்கைகள், சிபாரிசுகள், அவதானிப்புரைகள் என்பவற்றை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருப்பின் அவை தொடர்பான தகவல்கள் தங்களது பயன்பாட்டுக்காகவும் அறிவுக்காகவும்எதிர்காலத்தில் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

நாளாந்தம் தங்களது கோரிக்கைகள் 200 – 300 அளவில் இந்த அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறுகின்றன.எனவே மேற்படி உபாயங்கள் ஊடாக நாம் முயற்சி எடுப்பது யாதெனில், எமது நேரம், உழைப்பு மற்றும் செல்வத்தை மீதப்படுத்தி தங்களுக்கு தாமதமின்றி வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்காகும்.

இந்த முயற்சியின் போது பல்வேறுபட்ட தொழில்நுட்ப காரணங்களினால்ஆரம்ப கட்டத்தில் சில தாமதங்கள் மற்றும் தடைகள் ஏற்படலாம். எனவே அவ்வாறான நிலமைகளின் போது பொறுமையுடன் மற்றும் உண்மைத்தன்மையுடன் தாங்கள் வழங்கும் ஆக்கபூர்வமான யோசனைகள் / குற்றச்சாட்டுக்களை எற்றுக்கொள்வதற்கு நாம் தயாராக உள்ளோம். அதன் பொருட்டு மேலதிக செயலாளரை (செயற்படுத்தல்) அழைக்கவும். தாங்களுக்கு வினைத்திறனுள்ள சேவையை வழங்க எமக்கு ஒத்துழைப்பு நல்கவும்.

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு 2020.08.24